இதனைப்பற்றி என்ன? ....

# பரிசுத்த ஞானஸ்நானம்

மக்களை மரிக்கவிடாமல் தவிர்க்கச்செய்யும், மற்றும் ஏற்கெனவே மரித்தவர்களை மீண்டும் உயிர்ப்பிக்கச்செய்து அவர்கள் மீளவும் மரிக்காமல் தடுக்கும் அசாத்தியமான திறமை கொண்ட ஒரு வைத்தியர் இருப்பதாக ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள். இப்படியான வைத்தியரிடம் சிகிச்சை பெறுவதற்கு மக்கள் அவர்களால் ஆன எதையும் செய்வார்கள் என்பதையும் கற்பனை செய்து பாருங்கள்! இப்போ, பரிசுத்த ஞானஸ்நானத்திலே தேவன் உண்மையாகவே எமக்கு நித்திய வாழ்வின் கொடையை வழங்குகிறார் என்பதைக் கருத்திற் கொள்ளுங்கள்! இந்த அற்புதமான ஆசீர்வாதத்தைப் பற்றி இன்னும் அதிகம் நாம் கற்றுக்கொள்ளட்டும்.

## ஞானஸ்நானம் என்றால் என்ன?

*ஞானஸ்நானம் என்பது வெறும் நீர் அல்ல, மாறாக, அது தேவனுடைய கட்டளைக்குள் உள்ளடக்கப்பட்ட தண்ணீரும் அதனுடன் இணைந்ததான தேவனுடைய வார்த்தையுமாகும்.* [1]

கையளவேயான எளிய தண்ணீரில் விசேஷமாக உள்ளது என்ன? எதுவுமே இல்லை, தனது வார்த்தையைத் தேவன் அதனுடன் இணைக்கும் வரைக்கும்! ஞானஸ்நானத்திலே அதைத்தான் தேவன் செய்கிறார். தனது ஜீவனை உருவாக்கும் மற்றும் ஜீவனை வழங்கும் வார்த்தையைத் தேவன் பரிசுத்த ஞானஸ்நானத்தின் தண்ணீருடன் இணைப்பதால், நாம் தண்ணீராலும் ஆவியாலும் மறுபடி பிறக்கிறோம். (யோவான் 3:5)

## தேவனுடைய அந்த வார்த்தை என்ன?

*எமது கர்த்தராகிய கிறிஸ்து மத்தேயு கடைசி அதிகாரத்திலே கூறுகிறார்: "ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து.."* (மத். 28:19)

எமது கர்த்தர் ஞானஸ்நானத்தைக் கட்டளையிடுகிறார். இது ஒரு தெரிவோ அல்லது நல்லதோர் "மேலதிகமோ" அல்ல. தேவனுடைய வார்த்தையானது அவருடைய நன்மையும் கிருபையுமான சித்தப்படியாகப் பல வடிவங்களை எடுக்கிறது. வார்த்தையானது பிரசங்கிக்கப்படுகிறது, கற்பிக்கப்படுகிறது, பிரகடனப்படுத்தப்படுகிறது. அது வாசிக்கப்படுகிறது, கற்கப்படுகிறது, தியானிக்கப்படுகிறது. அது கிறிஸ்தவர்களால் கிறிஸ்தவர்களல்லாதோருடனும் சக விசுவாசிகளுடனும் ஒரே போலப் பகிரப்படுகிறது. தேவனுடைய வார்த்தை, அவரது வாக்குத்தத்தம், அதுதான் ஞானஸ்நானத்தை அதுவாக ஆக்குகிறதாய் உள்ளது.

தேவனுடைய வார்த்தை தண்ணீருடன் இணையும்போது, தேவன்தாமே தனது சர்வ வல்லமையுடனும், அவரது மன்னிப்பின் ஆசீர்வாதத்துடனும், ஜீவனுடனும் இரட்சிப்புடனும் பிரசன்னமாகியிருக்கிறார். கிறிஸ்து தண்ணீர் ஞானஸ்நானத்தைத் தனது வார்த்தையால் திருநிலைப்படுத்துகிறார். அதனால் நாம் ஞானஸ்நானததிலே தண்ணீரில் கிறிஸ்துவுடன் நிற்கவும், பிதாவானவர் எம்மை தனது பிரியமான பிள்ளைகளென அழைக்கவும், பரிசுத்த ஆவியானவர் எமக்கு அருளப்படவும், பரலோகம் எமக்குத் திறக்கவும் ஏதுவாக உள்ளது.

வார்த்தையைப் பிரசங்கிப்பதாலோ அல்லது கற்பிப்பதாலோ விசுவாசத்துக்குக் கொண்டுவரப்பட்டபின்பு ஞானஸ்நானம் பெறுபவர்கள் ஞானஸ்நானத்துடன் தேவன் இணைத்துள்ள ஆசீர்வாதங்கள் அனைத்தையுமே பெற்றுக்கொள்கிறார்கள்.

## ஞானஸ்நானம் என்ன நன்மைகளை வழங்குகிறது?

*பாவங்களுக்கான மன்னிப்பை அது செயற்படுத்துகிறது, மரணம் மற்றும் பிசாசிடம் இருந்து எம்மை மீட்டெடுக்கிறது, அத்துடன் தேவனுடைய வார்த்தையும் வாக்குத்தத்தங்களும் அறிவிப்பதுபோல விசுவாசிக்கும் அனைவருக்கும் நித்திய ஜீவனையும் வழங்குகிறது. தேவனுடைய அந்த வார்த்தையும் வாக்குத் தத்தங்களும் எவை? மாற்கு கடைசி அதிகாரத்திலே எமது கர்த்தராகிய இயேசு கூறுகிறார், "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்"* (மாற்கு 16:16)

ஞானஸ்நானத்திலும் அதற்கூடாகவும் தேவன் எமது பாவங்கள் அனைத்தினின்றும் எம்மைச் சுத்தம்செய்கிறார், சாத்தானின் வல்லமையில் இருந்து எம்மைப் பறித்தெடுக்கிறார், அத்துடன் எமக்கு நித்திய வாழ்வினை வழங்குகிறார். இவை அனைத்துமே தேவன் தமது ஆசீர்வாதங்களை எம்குத் தரும்போது தேவன் செய்பவைகள். அது அவரது வாக்குத்தத்தம். கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து தனது வாழ்வு, மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் மூலமாக வென்றெடுத்த கொடைகளை ஞானஸ்நானத்திலே எமது திரியேக தேவன் எம் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட ரீதியிலே வழங்குகிறார். பின்வரும் பகுதிகளைக் குறிப்பாகப் பார்க்கவும், கலாத். 3:27; கொலோசே. 1:13–14; 1 பேதுரு 3:21; தீத்து 3:5–7 மற்றும் 1 கொரி. 6:11.

## தண்ணீர் எப்படியாக இப்படியான மேன்மையான காரியங்களைச் செய்யலாம்?

*நிச்சயமாகத் தண்ணீரல்ல, ஆனால் தண்ணீருடன் தேவனுடைய வார்த்தையே, தண்ணீரில் உள்ள இந்தத் தேவனுடைய வார்த்தையை நம்பும் விசுவாசத்துடன்கூட இவைகளைச் செய்கிறது. தேவனுடைய வார்த்தை இல்லாமல் தண்ணீர் வெறும் தண்ணீர் மாத்திரமே, அங்கே ஞானஸ்நானம் கிடையாது. ஆனால் தேவனுடைய வார்த்தையுடன்கூட அது ஞானஸ்நானம், ஜீவன் அருளும் தண்ணீர், கிருபையில் செழிப்பானது, அத்துடன் பரிசுத்த ஆவியிலே புது வாழ்கைக் கழுவுகிறது. தீத்து மூன்றாம் அதிகாரத்திலே பவுல் கூறுகிற பிரகாரம், " .....தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியின் புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார். தமது கிருபையினாலே நாம் நீதிமான்களாக ஆக்கப்பட்டு, நித்திய ஜீவன் உண்டாகும் என்கிற நம்பிக்கையின்படி சுதந்தரராக ஆகத்தக்கதாக, அவர் தமது இரட்சகராகிய இயேசுக்கிறிஸ்து மூலமாய், அந்தப் பரிசுத்த ஆவியை நம்மேல் சம்பூரணமாய்ப் பொழிந்தருளினார். இந்த வார்த்தை உண்மையுள்ளது..."* (தீத்து 3:5–8).

சாதாரண தண்ணீர் நிச்சயமாகவே இப்படியான மேன்மையான காரியங்களைச் செய்யாதுதான், ஆனால் ஞானஸ்நானத்தின் தண்ணீர் சாதாரண தண்ணீரல்ல! கிறிஸ்து நமக்காக வென்ற ஆசீர்வாதங்களை எமக்கு விநியோகிக்கும் தேவனுடைய அதிவிசேஷமானதோர் வழிமுறைதான் ஞானஸ்நானம். ஞானஸ்நானம் நாம் செய்யும் காரியமல்ல, மாறாக தேவன் செய்யும் ஒரு காரியமாகும். எனவே, அது வெறும் அடையாளத்தை விடவும் அப்பாற்பட்டது. எமது பாவங்களை மன்னிப்பதிலும், கிறிஸ்துவுக்குள் புதுவாழ்வை அருளுவதற்கும், பரிசுத்த ஆவியானவரை அவரது அனைத்துக் கொடைகளுடனும் எம்மீது வழங்குவதிலும் தேவன் தாமே செயற்படும் ஒரு பரிசுத்த செயலே அது. ஞானஸ்நானம் இந்தக் கொடைகளை நாம் பெறும் விசுவாசத்தை எமக்கு வழங்குகிறது. பரிசுத்த ஆவியாகிய தேவன் ஞானஸ்நானத்துடன் இணைந்துவரும் வாக்குத்தத்தங்களிலே விசுவாசத்தை செயற்படுத்துகிறார்.

## இப்படியான தண்ணீரில் ஞானஸ்நாம் நமக்குச் சுட்டிக்காட்டுவது என்ன?

*எம்மிலே உள்ள பழைய ஆதாம், நாளாந்தம் எமது நெஞ்சார்ந்த மனவருத்தம் மற்றும் மனமாற்றம் ஆகியவற்றால் முழ்கி, சகல பாவங்களுடனும் தீய ஆசைகளுடனும் மரிக்க, புதிய மனிதன் தினந்தோறும் வெளிப்பட்டு தேவனுக்கு முன்பாக நீதியிலும் பரிசுத்தத்திலும் என்றென்றுமாக வாழ்வதற்கு எழவேண்டும். இது எங்கே எழுதப்பட்டுள்ளது? பரி. பவுல் ரோமர் ஆறாம் அதிகாரத்திலே*

# பரிசுத்த ஞானஸ்நானம்பற்றி என்ன?

*எழுதுகிறார்: "மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவன் உள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்கு உள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம்"* (ரோமர் 6:4).

ஞானஸ்நானத்திலே நாம் கிறிஸ்துவுடன்கூட அடக்கம் பண்ணப்படுகிறோம், அதுடன் ஞானஸ்நானத்திலே நாம் கிறிஸ்துவுடன்கூட எழுப்பப்படுகிறோம். அவரது மரணமும் உயிர்த்தெழுதலும் எமக்குச் சொந்தமாக ஆக்கப்படுகிறது; இதனாலேதான் எமது வாழ்வு முழுவதிலும் நாம் "நான் ஞானஸ்நானமடைந்தேன்!" என்று எம்மால் கூற முடியுமாக உள்ளது. கிறிஸ்துவுடனேகூட அவரது மரணத்துக்குள் புதைக்கப்பட்டதாலே, நாம் ஒரு காலத்திலே இளைப்பாறவுள்ள கல்லறையைப் பற்றி நாம் அஞ்சத் தேவையில்லை. கிறிஸ்து ஏற்கெனவே அங்கே சென்றிருக்கிறார். பரிசுத்த ஞானஸ்நானத்திலே அவரது கல்லறைக்கூடாக நாம் கடந்துசென்று அவரது உயிர்ப்புக்குள் பிரவேசித்தோம்.

தனது பெரிய வினா–விடை போதினியிலே லூத்தர் சொல்வதுபோல, "நான் ஞானஸ்நானம் பெற்றிருந்தால், நான் மீட்கப் படுவதுடன் நித்திய ஜீவனை எனது சரீரத்திலும் ஆன்மாவிலும் அடைவேன் எனும் வாக்குத்தத்தம் எனக்கு உண்டு.... எமது சரீரத்தையும் ஆன்மாவையும் அலங்கரிப்பதற்கு ஞானஸ்நானத்தை விடப்பெரிதாக வேறேதும் அணிகலன்கள் இல்லை... தேவன் எமக்கு வழங்கி எமது விசுவாசம் பற்றிக்கொள்ளும் ஒரு அரும்பெரும் திரவியமான ஞானஸ்நானமானது, சிலுவையின்மீது கிறிஸ்து என்பது எப்படி ஒரு மனித செயலில்லையோ மாறாக வார்த்தையிலே புரிந்து கொள்ளப்பட்டு எமக்காக வழங்கப்பட்ட அரும்பெரும் திரவியமாக இருக்கும்படியாக நாம் விசுவாத்தால் பெற்றோமோ அதே போன்றதே."

## எமது அனுதின ஜீவியத்துடன் ஞானஸ்நானம் கொண்டுள்ள பொருட்டென்ன?

எல்லாமே! எமது முழு வாழ்வுமே தேவனுடைய வாக்குத்தத்தங்களை நம்பி வாழும் வாழ்வாகும். அது பரிசுத்த ஞானஸ்நானத்தின்மூலம் எமக்கு வழங்கப்பட்டது. நாம் இடைவிடாமல் ஞானஸ்நானத்துக்கே மீளவருவோம். எமது வாழ்வுகளிலே சோதனைகளும் வேதனைகளும் இடம்பெறும் கணங்களிலே, அனைத்துமே எம்மீது தகர்ந்து பொரிவதுபோலத் தோன்றினாலுங்கூட, குறிப்பாக எமது பாவமும் அந்தப் பாவங்களையிட்ட குற்ற உணர்வும் எம்மைப் பீடித்திருக்கும்போது, நாம் லூத்தர் கூறுவதுபோல, "எமது ஞானஸ்நானத்தை இழுத்தெடுத்து பிசாசின் மூக்கின்கீழ் அசைத்துக்காட்டிக் கூறுவோம், 'நான் ஞானஸ்நானமுற்றவன் ... தேவனுடைய முழுக்கைப் பெற்றவன். அது கிறிஸ்துவின் சொந்த இரத்தமே." இது கிறிஸ்துவின் இரத்தத்துடன் ஆசீர்வதிக்கப்பட்டு கலக்கப்படும் ஒரு குளியலாகும்."[2] நாம் கிறிஸ்துவின் சிலுவையண்டை மீள இயலாது மட்டுமன்றி, நாம் அங்கு இருப்பதாகக் கற்பனை பண்ணவும் நம்மால் இயலாது. மாறாக, எமது வாழ்வுகளிலே நாம் "இங்கேயே இப்போதே" எனும் தேவனின் செயற்பாட்டுக்கு நாம் திரும்புகிறோம். நாம் எமது ஞானஸ்நானத்துக்கே திரும்புகிறோம். ஏனென்றால், அங்கேதான் அப்போதுதான் தேவன் நம்மை கிறிஸ்துவுடனேகூட புதைத்து, அவருடன்கூட எம்மை ஒரு புதுவாழ்வுக்குள் எழுப்பியிருக்கிறார்.

தனது பெரிய வினா–விடை போதினியிலே, லூத்தர் கூறுகிறார், "ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் வாழ்வுமுழுவதும் கற்பதற்கும் கைக்கொள்வதற்கும் போதுமானவைகள் உள்ளன. ஞானஸ்நானம் வாக்களிப்பதும் தருவிப்பதும் என்ன என்பதை உறுதியாக நம்புவதற்கு அவனுக்குப் போதியளவு உள்ளது – மரணத்தின்மீதும் பிசாசின்மீதும் வெற்றி, பாவங்களின் மன்னிப்பு, தேவனுடைய கிருபை, கிறிஸ்து முழுவதும் மற்றும் தனது அருட்கொடைகளுடன் பரிசுத்த ஆவியானவர்." அத்துடன், "எனவே நீங்கள் பாவமன்னிப்பிலே வாழ்ந்தால், நீங்கள் ஞானஸ்நானத்திலே நடக்கிறவர்களாவீர்கள். அது இந்தப் புது வாழ்வை அறிவிப்பது மாத்திரமல்லாமல், அதனை உருவாக்கி, ஆரம்பித்து ஊக்குவிக்கவும் செய்கிறது. ஞானஸ்நானத்திலே பழைய மனிதனை நசுக்கும்படிக்கு நமக்குக் கிருபையும், ஆவியும் வல்லமையும் வழங்கப்படுகிறது, அதன்மூலம் புதிய மனிதன் முற்பட்டு, வலிமையாக வளர்வான். எனவே ஞானஸ்நானம் நித்தியமாக நிலைத்திருக்கும் .... எனவே மனமாற்றம் ஞானஸ்நானத்துக்கு மீள்வதும் அணுகுவதுமேயல்லாமல் வேறு எதுவுமே அல்ல."

## ஏன் குழந்தைகளும் இளம் பிள்ளைகளும் ஞானஸ்நானப்படுகின்றனர்?

வயதினர்கள் ஞானஸ்நானப்படும் அதே காரணங்களுக் காகவே அவர்களும் ஞானஸ்நானப்படுகின்றனர் – அதாவது தேவனின் கட்டளை மற்றும் வாக்குத்தத்தின் நிமித்தமே. ஞானஸ்நானத்தின்போது வாக்களிக்கப்படுவது அதனைப் பெறும் அனைவருக்கும் வழங்கப்படுகிறது; எனவே, குழந்தைகளும் இளம் பிள்ளைகளுக்குங்கூட தேவனுடைய வாக்குத்தத்தம் உள்ளது. அவர்களுந்தான் தேவனுடைய பிள்ளைகள் ஆக்கப்படுகிறார்கள். அவர்களுந்தான் "சகல ஜாதிகள்" (மத். 28:19) இற்குள் உள்ளடக்கப்படுகிறார்கள். இயேசு சிறு பிள்ளைகளைத் தன்னிடம் வரும்படியாகக் குறிப்பாக அழைக்கிறார் (லூக். 18:15–17). ஆனாலும் மிகவும் முக்கியமாக, பாவிகள் என்ற ரீதியிலே, ஞானஸ்நானம் வழங்கும் காரியங்கள் குழந்தைகளுக்கும் தேவை.

தனது வார்த்தையினால் தேவன் காண்பவை காணாதவை யாவையும் படைத்தார். தனது வார்த்தையால் எமது கரத்தராகிய கிறிஸ்து இறந்த ஒரு மனிதனை கல்லறையினின்றும் அழைத்தார் (யோவான் 11:43–44). அதுபோலவே தனது வார்த்தையிலும் அதற்கூடாகவும் மற்றும் ஞானஸ்நான வாக்குத்தத்தங்களூடாகவும் குழந்தைகளிலும் தேவன் அதேபோன்ற விசுவாசத்தின் கொடையைச் செயற்படுத்துவார் என்பதையிட்ட ஏதாவது சந்தேகம் ஏன்? ஞானஸ்நானம் எமது அலுவல் என நாம் தப்பெண்ணம் கொண்டிருந்தால், அதன்மீது நாம் எப்போதுமே சந்தேகத்தையே கொண்டிருப்போம். அது எமது அலுவல் அல்ல, மாறாக தேவனுடைய கிருபைநிறை வாக்குத்தத்தமும் பணியும் என நாம் இனங்காணும்போது, குழந்தைகளும் ஞானஸ்நானப்பட்டு அத்துடன் ஞானஸ்நானத்திலும் அதற்கூடாகவும் வழங்கப்படும் திரவியங்களைப் பெறவேண்டும் என்பதை உணர்வோம்.

சிறுபிள்ளைகளுக்கும் குழந்தைகளுக்கும் ஞானஸ் நானத்தை மறுக்கும் தனிநபர்களும் சபை அலகுகளும் இருப்பதென்பது துக்ககரமானதே. பரிசுத்த ஞானஸ்நானம் வழங்குபவைகள் இந்தச் சிறு பிள்ளைகளுக்குத் தேவை என்பதை அவர்கள் நம்புவதில்லை. தேவன் ஞானஸ்நானத்தின்மூலமாக இரட்சிக்கிறார் என்று வேதாகமம் தெளிவாகக் கற்பிப்பதை அவர்கள் நம்புவதில்லை. இப்படியான தப்பான உபதேசங்களின் விளைவாக, பரிசுத்த ஞானஸ்நானத்தின் வல்லமை, ஆசீர்வாதம் மற்றும் ஆறுதல் ஆகியவற்றை அவர்கள் தமக்கும் பிறருக்கும் மறுக்கிறார்கள். இது துக்ககரமான விடயம், ஏனெனில், தேவன் தனது வார்த்தையிலே தெள்ளத்தெளிவாக பிரகடனப்படுத்தியதை மறுப்பதென்பது தேவனுக்கெதிரான மோசமான குற்றச்செயலாகும்: "(ஞானஸ்நானம் பற்றிய) வாக்குத்தத்தமானது உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும்... உண்டாயிருக்கிறது.." (அப். நட. 2:39) மற்றும், "...ஞானஸ்நானமானது...இப்போது நம்மையும் இயேசுக் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது" (1 பேதுரு 3:21).

## முடிவாக

ஞானஸ்நானம் என்பது எவ்வளவு மேன்மையும் சிறப்புமானதென்பதை நாம் கண்டுகொள்கிறோம். அது பிசாசின் தாடைகளில் இருந்து எம்மைப் பறித்தெடுத்து தேவனை எமக்குச் சொந்தமாக ஆக்கி, பாவத்தை எடுத்துப்போட்டு அதனை மேற்கொண்டு, தினந்தோறும் புதிய மனிதனை வலுவூட்டுகிறது. இந்த நிகழ்கால துயரத்தில் இருந்து நித்திய மகிமைக்குக் கடந்துசெல்லும்வரைக்கும் அது எப்போதுமே எம்மிடம் தரித்திருக்கும்" (*பெரிய வினா–விடை போதினி*)

பரிசுத்த ஞானஸ்நானத்தின் அர்த்தம், வல்லமை மற்றும் வாக்குத்தத்தம் ஆகியவை எமது இடத்திலே பரிபூரணமாக வாழ்ந்த, உலகின் பாவங்களுக்காகத் துன்பப்பட்டு, பரிகார பலியாக மரித்த ஒருவரிலேயே முழுவதுமாகச் சார்ந்துள்ளது. அவர் மரணத்தின்மீதும் கல்லறையின்மீதும் வெற்றிகரமாக உயிர்த்தெழுந்தார். பரிசுத்த ஞானஸ்நானத்திலே, கிறிஸ்துவுடையை பாவநிவாரணபலியின் சகல ஆசீர்வாதங்களையும் நாம் பெற்றுக்கொள்கிறோம். பரிசுத்த ஞானஸ்நானம் எனும் அவரது கொடைக்காகத் தேவனுக்கே நன்றி!

1. சரிந்த எழுத்தில் இருக்கும் வார்த்தைகள் லூத்தரின் சிறிய வினா–விடை போதினியிலிருந்து எடுக்கப்பட்டது
2. WA 47:651,10-19, 32-36.

கலாநிதி A.L. பர்றி (Barry)
தலைவர்,
லூத்தரன் சபை – மிசூரி திருப்பேரவை